தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் மன்றம், நாமக்கல்
முன்னிலை:- திரு. ஜி. ராஜா பி.எல்.,
தலைமை நீதித்துறை நடுவர்

2014 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 26 ஆம்நாள் புதன்கிழமை

(2045 திருவள்ளுவர் ஆண்டு , ஸ்ரீ ஜெய வருடம் ஐப்பசித் திங்கள் 9- ஆம்நாள்)

M.C.No. 22/2014

யோகலட்சுமி (வயது 35)
க//பெ செல்வராஜு,
த/பெ ஆவுளி,
கரட்டுப்பட்டி, நாகைநல்லூர்,
தொட்டியம் தாலுக்கா,
திருச்சி மாவட்டம் .... மனுதாரர்

WEB COPY

// எதிராக //

செல்வராஜு(வயது 40),
த/பெ ஆறுமுகம்,
ஆதிதிராவிடர் தெரு,
ஆர்.கே. நகர்,
ஒருவந்தூர்,
நாமக்கல் வட்டம் &
நாமக்கல் மாவட்டம் ... எதிர்மனுதாரர்

இம்மனு என் முன்பாக இறுதியாக 19.11.2014-ஆம் தேதி விசாரணைக்காக வந்த போது மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு. T.மோகன்ராஜ் அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரரை அழைத்த போது எதிர்மனுதாரர் இந்நீதிமன்றத்தில் ஆஜராகாததால்,எதிர்மனுதாரருக் காக யாரும் பரிந்துரை ஏதும் செய்யாததால் எதிர் உரை ஏதும் தாக்கல் செய்யாததால் அவரை தோன்றாத்தரப்பினராக்கப்பட்டும் மனுதாரர் தரப்பில் சாட்சி விசாரிக்கப்பட்டும் சான்றாவணங்கள் முன்னிடப்பட்டும் மனுதாரர் தரப்பு வாதத்தைக் கேட்ட பின்பு வழக்காணவங்களை ஆய்ந்து இன்று நீதிமன்றத்தால் பகரப்படும்

உத்திரவு

மனுதாரருக்கு எதிர்மனுதாரர் மாதா மாதம் 10,000/- ஜீவனாம்சமாக வழங்க உத்திரவிடவேண்டுமென இம்மனுவினை கு.வி.மு.ச. 125 (1) பிரிவின் கீழ் மனுதாரர் தாக்கல் செய்துள்ளார்.

2)மனுவின் சுருக்கம்

மனுதாரருக்கும், எதிர்மனுதாரருக்கும் கடந்த 3.9.1998 ஆம் தேதி கரட்டுப்பட்டியில் மனுதாரர் இல்லத்தில் பெரியோர்களால் ஏற்பாடு செய்யப் பட்ட திருமணம் நடைபெற்றது. திருமணத்திற்கு பின்னர் மனுதாரர், எதிர்மனுதாரர் வீட்டில் வசித்து வந்தார். திருமணத்தின் பயனாக உபயமனுதாரர்களுக்கு குழந்தை ஏதுமில்லை. திருமணமான சில நாட்கள் வரை மனுதாரரை சந்தோஷமாக வைத்திருந்த எதிர்மனுதாரர் பின்னர் தினமும் குடித்துவிட்டு வீட்டுக்கு வர ஆரம்பித்தார். திருமணத்தின் போது மனுதாரரின் பெற்றோர் வரதட்சணை ஏதும் கொடுக்கவில்லை என்றும் எனவே மனுதாரர், அவரது பெற்றோர் வீட்டிற்கு சென்று வரதட்சணை வாங்கி வரும்படி துன்புறுத்த ஆரம்பித்தார். மனுதாரருக்கு குழந்தை இல்லை என்பதை காரணம் காட்டி, எதிர்மனுதாரரின் குடும்ப உறுப்பினர்கள் மனுதாரரை திடடியதால் மனுதாரர், எதிர்மனுதாரரை மருத்துவமனைக்கு சென்று இருவரும் மருத்துவ பரிசோதனை செய்து கொள்ளலாம் என மனுதாரர் கூறிய போது எதிர்மனுதாரர் மருத்துவமனைக்கு வர மறுத்ததுடன் மனுதாரரையும் மருத்துவமனைக்கு செல்ல அனுமதிக்கவில்லை. மனுதாரர் அவரது பெற்றோர் வீட்டிற்கு பணம் ரூ10,000/-மும் நகை 5 பவுனும் வாங்கி வந்தால் மட்டுமே எதிர்மனுதாரரோடு வாழ முடியும் என்றும், இல்லையென்றால்

WEB COPY

எதிர்மனுதாரருக்கு வேறு திருமணம் செய்து வைத்துவிடுவதாக மிரட்டினார். மேற்படி செய்கை குறித்து மனுதாரர் நாமக்கல் அனைத்து மகளீர் காவல நலையத்தில் கடந்த 26.7.13ம் தேதி புகார் கொடுத்ததில் மேற்படி எதிர்மனுதாரரும் அவரது குடும்பத்தாரும் மனுதாரரிடம் இனிமேல் தகராறு செய்ய மாட்டோம் என எழுதிக் கொடுத்து சென்றார்கள். பின்னிட்டு பழையபடி மனுதாரரை திட்டி அடித்து உதைத்து அவரது பெற்றோர் வீட்டிற்கு சென்று வரதட்சணை வாங்கி வரும்படி வற்புறுத்தி கடந்த 15.9.13 அன்று எதிர்மனுதாரரும் அவரது குடும்பத்தாரும் மனுதாரரை வீட்டை விட்டு வெளியில் துரத்திவிட்டனர். பின்னர் எதிர்மனுதாரர் கடந்த 13.4.14ம் தேதியில் வேறு ஒரு பெண்ணுடன் திருமணம் செய்து வைக்கப்பட்டதாக அறிந்து கடந்த 18.4.14ம் தேதி நாமக்கல் அனைத்து மகளீர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார். மேற்படி புகாருக்கு மனுதாரருக்கு CSR கொடுக்கப்பட்டுள்ளது. மனுதாரர் எதிர்மனுதாரருடன் சேர்ந்து வாழ எடுத்த அனைத்து முயற்சிகளும் தோல்வியில் முடிந்துவிட்டன. மனுதாரர் ஊரில் உள்ள பெரிய மனிதர்களின் துணையோடு எதிர்மனுதாரரிடம் பலமுறை பைசல் பேசியும் எதிர்மனுதாரர் அறிவுரைகளை ஏற்க மறுத்துவிட்டார். எதிர்மனுதாரர் மேஸ்திரி வேலைக்கு சென்று மாதம் ரூ18,000/- சம்பாத்து வருகிறார். மனுதாரர் தனது பெற்றோர் ஊருக்கு வந்து தனியாக வசித்து வருகிறார். எனவே மேற்படி மனுதாரருக்கு மருத்துவம், உணவு, உடை, இருப்பிடம் போன்ற் அத்தியாவசிய செலவினங்களுக்கு மாதம் ரூ10,000/- வாழ்க்கைப் பொருள் உதவியாக எதிர்மனுதாரர் வழங்க உத்தரவிட வேண்டும்..

3) எதிர்மனுதாரரை இந்நீதிமன்றத்தில் அழைத்த போது ஆஜராகாததால் எதிர்மனுதாரருக்காக யாரும் பரிந்துரை ஏதும் செய்யாததால் எதிர் உரை

WEB COPY

ஏதும் தாக்கல் செய்யாததால் அவர் தோன்றாத் தரப்பினர் ஆக்கப்பட்டுள்ளார்.

4) மனுதாரர் தரப்பில் ஒரு சாட்சி விசாரிக்கப்பட்டுள்ளார். ம.சா.ஆ. 1 முதல் 5 குறியீடு செய்யப்பட்டுள்ளது.

5 )இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சினை யாதெனில் மனுதாரருக்கு எதிர்மனுதாரர் ஜீவனாம்சம் வழங்க வேண்டுமா? அவ்வாறெனில் எவ்வளவு தொகை வழங்க வேண்டும் என்பதேயாகும்?.

<u>6)பிரச்சினை</u>

மனுதாரர் எதிர்மனுதாரயிடமிருந்து மாதம் ரூ10,000/- ஜீவனாம்சம் கோரி இம்மனுவினை தாக்கல் செய்துள்ளார்.

WEB COPY

7)மனுதாரர் யோகலட்சுமி ம.சா.1 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். இவர் மூலமாக மனுதாரருக்கும் எதிர்மனுதாரருக்கும் நடந்த திருமணத்திற்காக திருமண பத்திரிக்கை ம.சா.ஆ.1 ஆகவும் மனுதாரரின் வாக்காளர் அட்டை நகல் ம.சா.ஆ.2 ஆகவும் மனுதாரர் நாமக்கல் அனைத்து மகளீர் காவல் நிலையத்தில் 26.7.13 ம் தேதி கொடுத்த புகாரின் நகல் ம.சா.ஆ.3 ஆகவும மனுதாரர் அனைத்து மகளீர் காவல் நிலையத்தில் 18.4.2014 ஆம் தேதி கொடுத்த புகாரின் நகல் ம.சா.ஆ.4 ஆகவும மனுதாரர் அனைத்து மகளீர் காவல் நிலையத்தில் கொடுத்த புகாருக்கு காவல் நிலையத்தில் கொடுக்கப்பட்ட CSR நகல் ம.சா.ஆ.5 ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளது. மனுதாரர் தனது சாட்சியத்தில் மனுவினை ஒத்து சாட்சியம் அளித்துள்ளார்.

10)மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட சான்றாவணங்களில் இருந்தும், மனுதாருடைய சாட்சியத்திலிருந்தும் மனுதாரரும், எதிர்மனுதாரரும் கணவன் மனைவி என்பதும் இவர்களுடைய திருமணம் இன்றைய தேதி வரை ஊர்ஜிதத்தில் இருந்து வருவதும் தெரிய வருகிறது.

மேலும் மனுதாரருடைய சாட்சியத்திலிருந்து இந்த எதிர்மனுதாரர் எவ்வித காரணமும் இன்றி மனுதாரரை விட்டு பிரிந்து வாழ்ந்து வருகிறார் என்பது தெரிய வருகிறது. மேலும் மனுதாரருக்கு தனிபட்ட முறையில் வருமானம் இல்லை என ம.சா.1 ன் சாட்சியத்திலிருந்து தெரிய வருகிறது. எனவே இந்த எதிர்மனுதாரர் எவ்வித காரணமும் இன்றி மனுதாரரை புறக்கணித்து பிரிந்து வாழ்ந்து வருவதால், எதிர்மனுதாரர் மனுதாரருக்கு கணவர் என்ற முறையில் பராமரிக்கக் கடமைப்பட்டவர் ஆவார். ஆனால் மனுவில் மனுதாரர் தனக்கு ரூ10,000/- வீதம் மாத ஜீவனாம்சம் தேவை என்று கேட்டுள்ளார். மேலும் எதிர்மனுதாரர் மேஸ்திரி வேலை செய்து ரூ18,000/- சம்பாதித்து வருகிறார் என்று ம.சா.1 கூறியிருந்தாலும் அது குறித்து மனுதாரர் ஆணித்தரமான சாட்சியமோ, சான்றாவணங்கள் ஏதும் முன்னிலைப்படுத்தப்படவில்லை. எனவே எதிர்மனுதாருடைய வயது மற்றும் வருமானத்தைக் கருத்தில் கொண்டு, இன்றைய காலக் கட்டத்தில் உள்ள விலைவாசியைக் கருத்தில் கொண்டும் மனுதாரருக்கு எதிர்மனுதாரர் உணவு, உடை, இருப்பிடம், மருத்துவச் செலவு, ஆகியவற்றிற்கு மாதம் ஒன்றுக்கு ரூ5,000/- ஜீவனாம்சமாக வழங்க உத்திரவிடுவது நீதியின் பால் உகந்ததாக உள்ளது என தீர்வு கண்டு இப்பிரச்சினைக்கு அவ்வாறே முடிவு செய்யப்படுகிறது.

முடிவாக மனு பகுதியாக அனுமதிக்கப்பட்டு, எதிர்மனுதாரர் மனுதாரருக்கு மாதா மாதம் ரூபாய்5,000/- (ரூபாய் ஐயாயிரம் மட்டும்) மாத ஜீவனாம்சமாக இந்த மனு கோப்பில் எடுத்த நாளான 30.06.2014-ஆம் தேதியிலிருந்து வழங்க வேண்டும் என்றும், மேற்படி தொகையை எதிர்மனுதாரர் பிரதி ஆங்கில மாதம் 5ம் தேதிக்குள் மனுதாரரிடம் நேரிடையாகவே செலுத்த வேண்டுமெனவும் உத்திரவிடப்படுகிறது.

WEB COPY

இவ் உத்திரவு என்னால் சுருக்கெழுத்தாளருக்கு சொல்லப்பட்டு அவரால் விரிவாக்கத்தில் கணிணிமயமாக்கப்பட்டு என்னால் மீண்டும் பிழைத் திருத்தங்கள் செய்யப்பட்டு இன்று 2014 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள்26-ஆம் நாள் அவையறிய பகரப்பட்டது.

தலைமை நீதித்துறை நடுவர்
நாமக்கல்

<u>மனுதாரர் தரப்பு சாட்சிகள் :-</u>

| | | |
|---|---|---|
| ம.சா.1 | திருமதி. யோகலட்சுமி | மனுதாரர் |

WEB COPY

<u>மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள்:-</u>

| | | |
|---|---|---|
| ம.சா.ஆ. 1 | மனுதாரருக்கும் எதிர்மனுதாரருக்கும் நடந்த திருமணத்திற்கான திருமண பத்திரிக்கை | அசல் |
| ம.சா.ஆ. 2 | மனுதாரருடைய வாக்காளார் அட்டை | ஜெராக்ஸ் நகல் |
| ம.சா.ஆ. 3 | நாமக்கல் அனைத்து மகளீர் காவல் நிலையத்தில் மனுதாரர் எதிர்மனுதாரர் மீது 26.7.13 ஆம் தேதிகொடுத்த புகாருக்கான நகல் | ஜெராக்ஸ் நகல் |
| ம.சா.ஆ. 4 | நாமக்கல் அனைத்து மகளீர் காவல் நிலையத்தில் மனுதாரர் எதிர்மனுதாரர் மீது 18.4.14 ஆம் தேதிகொடுத்த புகாருக்கான நகல் | ஜெராக்ஸ் நகல் |
| ம.சா.ஆ. 5 | மனுதாரர் எதிர்மனுதாரர் மீது காவல் நிலையத்தில் கொடுதத புகாருக்கு காவல் நிலையத்தில் வழங்கப்பட்ட CSR நகல் | ஜெராக்ஸ் நகல் |

தலைமை நீதித்துறை நடுவர்,
நாமக்கல்

தலைமை நீதிததுறை நடுவர்
நீதிமன்றம், நாமக்கல்

எம்.சி. நெ. 22/2014
உத்திரவு நாள்26.11.2014

WEB COPY

| | |
|---|---|
| M.C.No.22/2014<br>**நாள்** 26.11.2014<br><br>மனுதாரர் ஆஜர்.<br>உத்தரவு பகரப்பட்டது.<br>முடிவாக மனு பகுதியாக அனுமதிக்கப்பட்டு, எதிர்மனுதாரர் மனுதாரருக்கு மாதா மாதம் ரூபாய்5,000/- (ரூபாய் ஐயாயிரம் மட்டும்) மாத ஜீவனாம்சமாக இந்த மனு கோப்பில் எடுத்த நாளான 30.06.2014-ஆம் தேதியிலிருந்து வழங்க வேண்டும் என்றும், மேற்படி தொகையை எதிர்மனுதாரர் பிரதி ஆங்கில மாதம் 5 ம் தேதிக்குள் மனுதாரரிடம் நேரிடையாகவே செலுத்த வேண்டுமெனவும் உத்திரவிடப்படுகிறது.<br><br>தலைமை நீதித்துறை நடுவர்<br>நாமக்கல் | |

WEB COPY